جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்


தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

1-A

سُبْحَانَ اللّٰهِ(١٠)

اَلْحَمْدُ لِلّٰهِ(١٠)

اللّٰهُ أَكْبَرُ(١٠)

ஸுப்ஹானல்லாஹ்(10 முறை)

அல்ஹம்துலில்லாஹ்(10 முறை)

அல்லாஹு அக்பர்(10 முறை)

அல்லாஹ் தூய்மையானவன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

அல்லாஹ் மிகப் பெரியவன்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்(ரலி) அவர்கள், திர்மிதீ 481, நஸாஈ 1299

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

1-B

உம்மு சுலைம் (ரலி) அவர்கள் நபி (ﷺ) அவர்களிடம் வந்து கூறினார்கள்.

“அல்லாஹ்வின் தூதரே! எனது தொழுகையில் நான் பிரார்த்தனை செய்வதற்காக சில வார்த்தைகளை எனக்குக் கற்றுத் தாருங்கள்.” அதற்கு நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

'பத்து முறை அல்லாஹ்வைத் துதியுங்கள் سبحان الله (சுப்ஹானல்லாஹ் என்று கூறுங்கள்),

மேலும் பத்து முறை அவனைப் புகழுங்கள் الحمد لله (அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுங்கள்),

மேலும் பத்து முறை அவனைப் பெருமைப் படுத்துங்கள் الله أكبر (அல்லாஹு அக்பர் என்று கூறுங்கள்).

பிறகு, உங்களுக்குத் தேவையானதை அவனிடம் கேளுங்கள், (அப்போது) அவன் கூறுவான்: 'ஆம், ஆம்' (அதாவது, உமது கோரிக்கையை ஏற்றுக்கொள்வான்)."

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்(ரலி) அவர்கள், திர்மிதீ 481, நஸாஈ 1299

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

2-A

سُبْحَانَ اللّٰهِ

اَلْحَمْدُ لِلّٰهِ

لَا إِلٰهَ إِلَّا ٱللّٰهُ

اللّٰهُ أَكْبَرُ

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ

اَللّٰهُمَّ ارْحَمْنِيْ

اَللّٰهُمَّ ارْزُقْنِيْ

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், ஷுஃபுல் ஈமான் 619

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

2-B

சுப்ஹானல்லாஹ்

அல்ஹம்துலில்லாஹ்

லா இலாஹ இல்லல்லாஹ்

அல்லாஹு அக்பர்

அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ

அல்லாஹும்மர்ஹம்னீ

அல்லாஹும்மர்ஸு(ز)க்னீ

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், ஷுஃபுல் ஈமான் 619

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

2-C

அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் இல்லை

அல்லாஹ் மிகப் பெரியவன்

அல்லாஹ்வே! என்னை மன்னித்து அருள்வாயாக!

அல்லாஹ்வே! எனக்கு அருள் புரிவாயாக !

அல்லாஹ்வே! எனக்கு ரிஸ்க் வழங்குவாயாக !

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், ஷுஃபுல் ஈமான் 619

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

2-D

## சிறப்பு

ஒரு கிராமவாசி (அஃராபி) நபி (ﷺ) அவர்களிடம் வந்து: "அல்லாஹ்வின் தூதரே! எனக்கு நன்மை தரக்கூடிய ஒன்றைக் கற்றுத் தாருங்கள்" என்று கேட்டார்.

அப்போது நபி (ﷺ) அவர்கள் அவரது கையைப் பிடித்து: "இவ்வாறு கூறுங்கள்: சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ்,லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் என்று சொல்லுங்கள்" என்றார்கள்.

அந்த கிராமவாசி அவற்றைத் தனது விரல்களில் எண்ணிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார். சிறிது தூரம் சென்றபின் சிந்தித்துவிட்டு மீண்டும் திரும்பி வந்தார்.

அவரைக் கண்ட நபி (ﷺ) அவர்கள் புன்னகைத்துவிட்டு, "இந்த ஏழை மனிதர் சிந்தித்துவிட்டு திரும்பி வந்துவிட்டார்" என்று கூறினார்கள்.

அவர் வந்து:"அல்லாஹ்வின் தூதரே! 'சுப்ஹானல்லாஹ்', 'அல்ஹம்துலில்லாஹ்', 'லா இலாஹ இல்லல்லாஹ்', 'அல்லாஹு அக்பர்' ஆகியவை அனைத்தும் அல்லாஹ்வுக்குரிய திக்ர்கள். அப்படியானால் எனக்குக் கிடைப்பது என்ன?" என்று கேட்டார்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், ஷுஃபுல் ஈமான் 619

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

2-E

அப்போது நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்:

"கிராமவாசியே! நீ 'சுப்ஹானல்லாஹ்' سُبْحَانَ اللهِ என்று கூறினால், அல்லாஹ்: 'நீ உண்மையே கூறினாய்' என்று கூறுவான்.

நீ 'அல்ஹம்துலில்லாஹ்' اَلْحَمْدُ لِله என்று கூறினால், அல்லாஹ், 'நீ உண்மையே கூறினாய்' என்று கூறுவான்.

நீ 'லா இலாஹ இல்லல்லாஹ்' لَا إِلٰهَ إِلَّا اللهُ என்று கூறினால், அல்லாஹ்: 'நீ உண்மையே கூறினாய்' என்று கூறுவான்.

நீ 'அல்லாஹு அக்பர்' اللهُ أَكْبَر என்று கூறினால், அல்லாஹ்: 'நீ உண்மையே கூறினாய்' என்று கூறுவான்.

பின்னர் நீ 'அல்லாஹும்மக்ஃபிர்லீ' اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ என்று கூறினால், அல்லாஹ்: 'நான் உன்னை மன்னித்துவிட்டேன்' என்று கூறுவான்.

நீ 'அல்லாஹும்மர்ஹம்னீ ' اَللّٰهُمَّ ارْحَمْنِيْ என்று கூறினால், அல்லாஹ்: 'நான் உன்மீது அருள் புரிந்துவிட்டேன்' என்று கூறுவான்.

நீ 'அல்லாஹும்மர்ஸுக்னீ ' اَللّٰهُمَّ ارْزُقْنِيْ என்று கூறினால், அல்லாஹ்: 'நான் உனக்கு ரிஸ்க் வழங்கிவிட்டேன்' என்று கூறுவான்.

அதன்பின் அந்த கிராமவாசி ஏழு விஷயங்களையும் தனது விரல்களில் எண்ணிக்கொண்டு மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

**அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், ஷுஃபுல் ஈமான் 619**

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

3

துன்னூன் நபி யூனுஸ்(அலை) அவர்கள்
மீனின் வயிற்றுக்குள் இருந்தபோது செய்த துஆ

لَا إِلَٰهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّي كُنْتُ مِنَ الظَّالِمِينَ

லா இலாஹ இல்லா அன்த சுப்ஹானக, இன்னீ குன்து மினழ் ழா(ظ)லிமீன்.

உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் யாருமில்லை. நீ மிகப் பரிசுத்தமானவன். நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் ஒருவனாக இருந்தேன்.

## சிறப்பு

ஒரு முஸ்லிம் எந்தக் காரியத்திற்காகவும் இந்த துஆவைக் கொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்தித்தாலும், அல்லாஹ் அவனுடைய பிரார்த்தனையை நிச்சயமாக ஏற்றுக்கொள்வான்.

திர்மிதீ 3505

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

4-A

### இரவில் எதிர்பாராத விதமாக விழித்தவர் ஓத வேண்டியது

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ
وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ الْحَمْدُ لِلَّهِ وَسُبْحَانَ اللهِ ،
وَلاَ إِلَهَ إِلاَّ اللهُ وَاللهُ أَكْبَرُ ، وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ
اللَّهُمَّ اغْفِرْ لِي

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்.

அல்ஹம்துலில்லாஹி, வஸுப்ஹானல்லாஹி,
வலா *இலாஹ இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர்,
வலா ஹவ்ல வலா குவ்வ(த்)த இல்லா பில்லாஹி,
அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ.

அறிவிப்பாளர்: உபதா இப்னு ஸாமித்(ரலி) அவர்கள், புகாரி 1154

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

4-B

## இரவில் எதிர்பாராத விதமாக விழித்தவர் ஓத வேண்டியது

யார் இரவில் விழித்து "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை. அவன் ஏகன், அவனுக்கு நிகரானவர் இல்லை, ஆட்சியும் அவனுக்குரியது, புகழும் அவனுக்குரியது, அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுள்ளவன்.

அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவன் தூயவன், அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. அவன் மிகப்பெரியவன் நன்மை செய்யும் ஆற்றலும் தீமையில் இருந்து விடுபடுவதும் அவனைக் கொண்டே இருக்கிறது என்று கூறிவிட்டு இறைவா! என்னை மன்னித்துவிடு என்றோ, வேறு பிரார்த்தனைகளையோ செய்தால் அவை அங்கீகரிக்கப்படும். உளுச் செய்து தொழுதால் அத்தொழுகை ஒப்புக் கொள்ளப்படும்.

அறிவிப்பாளர்: உபதா இப்னு ஸாமித்(ரலி) அவர்கள், புகாரி 1154

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

5-A

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ بِأَنِّيْ أَشْهَدُ أَنَّكَ أَنْتَ اللهُ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ الْأَحَدُ الصَّمَدُ، الَّذِي لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ وَلَمْ يَكُنْ لَّهُ كُفُوًا أَحَدٌ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க பிஅன்னீ அஷ்ஹது அன்னக அந்தல்லாஹு லா இலாஹ இல்லா அந்தல் அஹதுஸ்(ص)ஸமதுல்லதீ லம் யலித் வலம் யூலத் வலம் யகுல்லஹு குபு(ف)வன் அஹத்

அறிவிப்பாளர்: புரைததிப்னுல் ஹஸீப் அஸ்லமீ (ரலி) அவர்கள்,திர்மிதி 3475

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

5-B

யா அல்லாஹ்! நிச்சயமாக நீயே இறைவன், வணக்கத்திற்கு உரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை, நீ ஒருவன், எந்தத் தேவையுமற்றவன், எவரையும் பெறாதவன், எவராலும் பெறப்படாதவன், அவனுக்கு நிரகராக எவரும் இல்லையென்றும் நான் சாட்சி கூறுகிறேன்.

## சிறப்பு

இவ்வாறு ஒருவர் பிரார்த்திப்பதை செவியுற்ற நபி(ﷺ)அவர்கள் எனது உயிர் எவன் கை வசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக எதைக் கொண்டு பிரார்த்தித்தால் ஏற்றுக் கொள்ளப்படுமோ, எதைக் கொண்டு கேட்டால் கொடுக்கப்படுமோ அந்த மகத்தான அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு அவனிடம் கேட்டு விட்டார் எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: புரைததிப்னுல் ஹஸீப் அஸ்லமீ (ரலி) அவர்கள்,திர்மிதி 3475

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

6-A

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ بِأَنَّ لَكَ الْحَمْدَ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ الْمَنَّانُ بَدِيْعُ السَّمٰوَاتِ وَالْأَرْضِ يَا ذَا الْجَلَالِ وَالْإِكْرَامِ يَا حَيُّ يَا قَيُّوْمُ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க பிஅன்ன லகல் ஹம்த, லா இலாஹ இல்லா அன்(த்)த அல்மன்னான், பதீஉஸ் ஸமாவா(த்)தி வல்அர்ழ்(ض), யா தல்ஜலாலி வல்இக்ராம், யா ஹய்யு யா கையூம்

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,அபூதாவுத் 1495

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

6-B

யா அல்லாஹ்! நிச்சயமாக புகழனைத்தும் உனக்கே உரியது என்பதைக் கொண்டு நான் உன்னிடம் கேட்கிறேன்.

உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே பேருபகாரம் செய்பவன்!

வானங்களையும் பூமியையும் முன் மாதிரியின்றிப் படைத்தவன், மகத்துவமும் கண்ணியமும் உடையவனே!

என்றென்றும் உயிருடன் இருப்பவனே! நிலையானவனே!

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,அபூதாவூத் 1495

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

6-C

## சிறப்பு

நான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு மனிதர் தொழுது கொண்டிருந்தார்.

பிறகு அவர், யா அல்லாஹ்! நிச்சயமாக புகழனைத்தும் உனக்கே உரியது என்பதைக் கொண்டு நான் உன்னிடம் கேட்கிறேன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே பேருபகாரம் செய்பவன், வானங்களையும் பூமியையும் முன் மாதிரியின்றிப் படைத்தவன், மகத்துவமும் கண்ணியமும் உடையவனே! என்றென்றும் உயிருடன் இருப்பவனே! நிலையானவனே! என்று பிரார்த்தனை செய்தார்.

அப்போது நபி (ﷺ)அவர்கள் கூறினார்கள்: "சத்தியமாக இவர் அல்லாஹ்வின் மகத்தான பெயரைக் கொண்டு பிரார்த்தனை செய்துள்ளார்.

அந்தப் பெயரைக் கொண்டு (அவன்) அழைக்கப்பட்டால் அவன் பதிலளிக்கிறான், மேலும் அந்தப் பெயரைக் கொண்டு கேட்கப்பட்டால் அவன் கொடுக்கிறான்."

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,அபூதாவுத் 1495

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

7

## அல்லாஹ்வைப் புகழ்ந்து, நபி (ﷺ) அவர்கள் மீது ஸலவாத் கூறி பிறகு துஆ செய்தல்

நான் தொழுது கொண்டிருந்தேன். நபி(ﷺ) அவர்களும், (அவர்களுடன்) அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரும் இருந்தனர்.

நான் (தொழுகையின் இருப்பில்) அமர்ந்ததும், முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்து, பிறகு நபி (ﷺ) அவர்கள் மீது ஸலவாத் கூறி, அதன் பிறகு எனக்காகப் பிரார்த்தனை செய்தேன்.

அப்போது நபி (ﷺ) அவர்கள், "கேளுங்கள், உங்களுக்கு வழங்கப்படும்! கேளுங்கள், உங்களுக்கு வழங்கப்படும்! என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள்,திர்மிதி 593

# துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் சிறந்த வார்த்தைகள்

8

## பாங்கின் வார்த்தைகளை திரும்பச் சொல்லி முடித்தவுடன் துஆ செய்தல்

ஒருவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! முஅத்தின்கள் (பாங்கு சொல்பவர்கள்) எங்களை விட சிறந்து விடுகிறார்கள் (அதிக நன்மைகளை அடைகிறார்கள்).

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் கூறுவது போன்றே நீங்களும் கூறுங்கள் (அதாவது, பாங்கின் வார்த்தைகளை நீங்களும் திரும்பச் சொல்லுங்கள்). நீங்கள் (பாங்கு முடிந்து, அதைத் திரும்பச் சொல்லி) முடித்தவுடன், கேளுங்கள் (துஆ செய்யுங்கள்), அது உங்களுக்கு வழங்கப்படும் (உங்கள் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும்).

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள்,அபூதாவுத் 524